## கரும்பு ஆராய்ச்சி நிறுவகம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கரும்பு ஆராய்ச்சி நிறுவகத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 கணக்கீட்டுக் கொள்கை

நிறுவகத்தின் பிரதான வருமான மூலமான செஸ்வரி வருமானத்தை காசு அடிப்படையில் கணக்கு வைத்தல் நிறுவகத்தின் கொள்கையாக இருந்தது. மீளாய்வாண்டின் போது கிடைக்க வேண்டிய ரூபா 5,057,250 தொகையான செஸ்வரி வருமானம் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 5,057,250 இனால் அதிகரித்து அதே தொகையினால் மீளாய்வாண்டின் பற்றாக்குறை குறைவடைந்து நடைமுறைச் சொத்துக்கள் அதிகரித்திருந்தது.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2011 ஆம் ஆண்டின் போது நிதி, திட்டமிடல் அமைச்சிற்கு வழங்கப்பட்ட ரூபா 68,000,000 தொகையானது அந்த ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் உரிய பிரகாரம் சீராக்கப்பட்டிருந்த போதிலும் 2012 ஆம் ஆண்டின் உரிமை மாற்றங்கள் கூற்றில் ஆரம்ப மீதியில் அது சேர்க்கப்பட்டு

மீளாய்வாண்டில் வழங்கப்பட்ட தொகையாக மீளவும் கழிக்கப்பட்டு காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2013 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 6,500,000 பெறுமதியான 02 மோட்டார் வாகனங்கள் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக நிதிநிலைமைக்கூற்றில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ரூபா 6,500,000 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2.3 பெறவேண்டிய மற்றும் கொடுக்க வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேந்கொள்ளப்பட்டன.

### (அ) பெறவேண்டிய கணக்குகள்

2011 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட கடன்பட்டோர் காலப்பகுப்பாய்வு மாற்றப்படாமல் 2012 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. சரியான கடன்பட்டோர் காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 2 வருடங்களுக்கும் 5 வருடங்களுக்கும் இடையிலான காலப்பகுதிக்குரிய ரூபா 1,955,612 தொகையான மீதியையும் 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 5,100 தொகையான கடன்பட்டோர் மீதியையும் அறவீடு செய்ய முடியாதிருந்தது.

### (ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

கடன்கொடுத்தோர் மீதிகளின் கூட்டுத்தொகையான ரூபா 8,737,186 இல் ரூபா 881,222 கூட்டுத்தொகையான 4 கடன் மீதிகள் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் தொடக்கம் கொண்டுவரப்பட்டிருந்த போதிலும் அந்த கடன்கொடுத்தோர் மீதியைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் ஒவ்வொரு விடயங்களுக்கும் முன்னால் காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையினால் அந்த கொடுக்கல் வாங்கல்களை சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

| விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| கடன்பட்டோர் | 2,147,456 | மீதி உறுதிப்படுத்தல் கடிதம் |
| கடன்கொடுத்தோர் | 8,737,186 | மீதி உறுதிப்படுத்தல் கடிதம் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிறுவகத்தின் செயற்பாடுகள் ரூபா 7,900,416 பற்றாக்குறையை விளைவித்திருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 19,495,035 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகின்ற போது மீளாய்வாண்டின் செயற்பாடுகளின் விளைவுகள் ரூபா 27,395,451 தொகையான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் செஸ்வரி வருமானம் ரூபா 4,795,630 இனால் குறைவடைந்தமை மற்றும் செயற்பாட்டுச் செலவினம் ரூபா 22,197,015 இனாலும், வெளிநாட்டுப் பிரயாணச் செலவுகள் ரூபா 3,906,167 இனாலும், பராமரிப்புச் செலவினம் ரூபா 3,891,296 இனாலும் மற்றும் அபிவிருத்திச் செலவினம் ரூபா 3,975,481 இனாலும் அதிகரித்தமை மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளின் வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக அமைந்திருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

(அ) வெளிநாட்டுப் பிரயாணம், போக்குவரத்துச் செலவினம் மற்றும் ஆராய்ச்சி செலவினங்கள் முன்னைய ஆண்டிற்கு ஒப்பீடாக முறையே 417 சதவீதம், 50 சதவீதம் மற்றும் 67 சதவீதமாக அதிகரித்திருந்தன.

(ஆ) 2013 ஆம் ஆண்டிற்குரிய அட்டுறு செலவினம் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தமையினால் செலுத்த வேண்டிய கணக்கு 117 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

**2.3 நிறுவகத்திற்கு எதிராக அல்லது நிறுவகத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகள்**

(அ) நிறுவகத்தில் சேவையாற்றிய இரண்டு நபர்களுக்கு எதிராக நிறுவகத்தினால் இரண்டு வழக்குகள் தொடரப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த வழக்குகள் விசாரணையில் இருந்தன.

(ஆ) நிறுவகத்தை விட்டுச் சென்ற உத்தியோகத்தருக்கு எதிராக ரூபா 2,974,960 தொகையான நட்டஈடு கோரப்பட்டு நிறுவகத்தினால் வழக்குத் தொடரப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த வழங்கு விசாரணையில் இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ) செஸ்வரித்தொகை சேகரித்தல்**

சுங்கத் திணைக்களத்துடன் பிணைமுறிகளின் கீழ் பாரியளவில் சீனி இறக்குமதி செய்கின்ற வியாபாரிகளினால் சீனி இறக்குமதி செய்யப்பட்டு மூடப்பட்ட களஞ்சியங்களில் வைப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் அந்த சீனி இருப்புக்களுக்காக செஸ்வரித் தொகை அவை மூடப்பட்ட களஞ்சியத்திலிருந்து விநியோகிக்கப்படும் போதே அறவிடப்படுகின்றது. மேற்கூறப்பட்டவாறு பாரியளவில் சீனி இறக்குமதி செய்தல்களுக்குரிய அறிக்கை நிறுவகத்தினால் சுங்கத்திலிருந்து பெறப்பட்டு (Ex bond Sales) அதற்குரிய விநியோகித்தல்களுடன் இணக்கமொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதனால் மேற்கூறப்பட்ட மொத்த சீனி இருப்பிற்காகவும் செஸ்வரித் தொகை

மீளவும் பகுதியாக அறவிடப்பட்டிருந்தமையை உறுதிப்படுத்துவதற்கு போதியளவான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) பராமரிப்புப் பிரிவு**

(i) மீளாய்வாண்டின் செப்தெம்பர் வரை மாத்திரம் 12 பராமரிப்பு மற்றும் நிர்மாண செயற்பாடுகள் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் அதற்குத் தேவையான பாதீட்டு மாதிரியில் காணப்படுகின்ற பிரகாரம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பராமரிப்பு பிரிவில் ஒட்டுமொத்த செலவினமும் இனங்காணப்பட்டிருந்த போதிலும் ஒவ்வொரு செயற்பாடுகளினதும் செலவினங்களை வெவ்வேறாக இனங்காணாமையின் காரணமாக செயற்பாடுகளுக்கிடையே செலவினக் கட்டுப்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டின் போது நிறைவேற்றுவதற்காக தயாரிக்கப்பட்ட உத்தேச செயல்நடவடிக்கைத் திட்டத்தில் 03 உள்ளக நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(இ) களஞ்சியப் பிரிவு**

நிறுவகத்தின் பிரதான களஞ்சியத்தில் இருப்பு அறிக்கையைப் பேணுவதற்கு முறையான பின்காட் முறைமை இருக்கவில்லை.

**(ஈ) நிலையான சொத்துப் பதிவேடு**

(i) நிறுவகத்தினால் நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேட்டில் சில சொத்துக்கள் பௌதீக ரீதியில் காணப்படாததுடன் பௌதீக ரீதியில் காணப்பட்ட சில சொத்துக்கள் பதிவேட்டிலிருந்து கைவிடப்பட்டிருந்தன.

(ii) நிறுவகத்தின் களஞ்சியப் பிரிவிலிருந்து விநியோகிக்கப்படுகின்ற நிலையான சொத்துக்கள் முறையான சான்றுறுதிப்படுத்தலின்றி விநியோகிக்கப்பட்டிருந்தன.

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கரும்பு ஆராய்ச்சி நிறுவகம் கடந்த 15 வருட காலத்தில் பாரிய அளவில் ஆராய்ச்சி செலவினங்களைச் செய்து அதிகரித்த சீனிச் செறிவைக் கொண்ட பல கரும்பு இனங்களை அறிமுகப்படுத்தியிருந்த போதிலும் அந்த இனங்கள் விவசாயிகளிடையே பரவலாக்கப்படாமையால் ஆராய்ச்சிகளின் விளைவுகள் வெற்றிகரமாக அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகரித்த சீனிச் செறிவைக் கொண்ட கரும்பு இனங்கள் கரும்பு ஆராய்ச்சி நிறுவகத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும் கரும்புத் தண்டுகள் கொள்வனவு செய்யப்பட்ட நிறுவனத்தினால் கரும்பு மரத்தில் அடங்கியுள்ள சீனியின் செறிவிற்குப் பதிலாக அதன் நிறை மற்றும் பருமன் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டமையினால் விவசாயிகள் புதிய இனங்களை பயிரிடுவதற்கு உற்சாகமின்றிக் காணப்பட்டனர். அதன் காரணமாக தற்போது பயிரிடப்பட்டுள்ள நில அளவில் பெறக்கூடியதாக இருந்த விளைச்சல் குறைவடைந்தமையினால் உள்நாட்டு உற்பத்தி குறைவடைந்திருந்தது.

## 3.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

பொறியியல் பிரிவினால் கரும்பு பயிர்ச் செய்கைக்குரிய இயந்திரங்கள் தொடர்பான ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துவதுடன் அதற்குரிய உபகரணங்களை வழங்க வேண்டியிருந்தது. அதற்கு மேலதிகமாக நிறுவகத்தின் மோட்டார் வாகன பராமரிப்பையும் மேற்கொள்ள வேண்டும். 2012 ஆம் ஆண்டின் போது இந்த பிரிவினால் ஆராய்ச்சி செயற்திட்டம் மற்றும் 09 ஆராய்ச்சி சேவை செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ) கரும்பு அறுவடை இயந்திரத்தை அறிமுகப்படுத்தும் செயற்திட்டம் (MT/01/11)**

கரும்பு அறுவடைகளில் செயற்திறனை அதிகரித்தல் மற்றும் கரும்பு அறுவடைகளின் கிரயத்தைக் குறைத்தல் நோக்கத்தில் முன்னைய வருடங்களிலிருந்து உள்நாட்டு பயிர்ச்செய்கை நிலங்களுக்கு ஈடுகொடுக்கும் வகையில் கரும்பு அறுவடை இயந்திரம் ஈடுபடுத்தப்பட்டு பரீட்சிக்கப்பட்டிருந்தது. 2012 ஆம் ஆண்டின் போதும் அந்த தேவைகள் இனங்காணப்பட்டு அமுல்படுத்துவதற்கு தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ரூபா 440,000 நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும் ஆராய்ச்சி செயற்திட்டத்திற்குரிய எந்த செயற்பாடுகளும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) கரும்புச் சக்கைகளை வெட்டும் இயந்திரம் அறிமுகப்படுத்தும் செயற்திட்டம் (MT/02/11)**

கரும்பு தண்டுகளை அறுவடை செய்யும் போது காணப்படுகின்ற குறைபாடுகளை தவிர்ப்பதற்கான சிறந்த வழியாகவும் ஊழியக் கிரயத்தை குறைக்கும் நோக்கத்தில் நிறுவகத்தினால் உயர்ந்த செயற்திறனையுடைய கரும்புச் சக்கைகளை வெட்டும் இயந்திரத்தை அறிமுகப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் இந்த செயற்திட்டத்திற்காக ரூபா 560,000 நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த செயற்திட்டத்திற்குரிய ஆரம்ப வேலைத்திட்டம் மாத்திரம் வடிவமைக்கப்பட்டிருந்தது.

**(இ) கரும்பு நாற்றுக்களை தரம் பிரிக்கும் உபகரணமொன்றை வடிவமைத்தலும் தயாரித்தலும்**

இந்த செயற்திட்டத்திற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ரூபா 810,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் 2012 ஆம் ஆண்டின் போது அது தொடர்பாக எந்தச் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.4 செயற்பாடற்ற சொத்துக்கள் மற்றும் குறைவான பயன்பாடுடைய சொத்துக்கள்**

பழுதுபார்த்து பாவிக்க முடியுமென சிபார்சு செய்யப்பட்ட 06 குளிரூட்டிகள் பழுதுபார்க்கப்படாமல் 3 வருடகாலமாக நிறுவகத்தின் பிரதான களஞ்சியத்தில் துருப்பிடித்த நிலையில் காணப்பட்டது.

**3.5 தாமதமாகிய செயற்திட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2012 ஆம் ஆண்டிற்கான பின்வரும் செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக பாதீட்டில் ரூபா 66,000,000 நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் திறைசேரியின் அங்கீகாரம் கிடைக்காமையினால் மீளாய்வாண்டின் போது எதுவும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. விபரம் பின்வருமாறு.

| **செயற்திட்டத்தின் பெயர்** | **ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு** |
|---|---|
| | **ரூபா** |
| ஆய்வுகூடத் தொகுதி மற்றும் அபிவிருத்தி நிலையம் என்பவற்றை நிர்மாணித்தல் - உடவலவ | 65,000,000 |
| பீடைகளை ஆய்வு செய்யும் நிலையம் நிர்மாணித்தல் | 1,000,000 |
| | 66,000,000 |

(ஆ) கரும்பு பூக்களை மகரந்தம் செய்யும் நிலையத்தை நிர்மாணிப்பதற்காக 2012 ஆம் ஆண்டில் ரூபா 2,000,000 தொகை பாதீட்டின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் இறுதி வரையிலும் உரிய நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதற்கான அடிக்கல் நாட்டும் சம்பிரதாய

நிகழ்வின் செலவினமாக ரூபா 179,505 தொகை 2012 ஆம் ஆண்டின் போது செலவிடப்பட்டிருந்தது.

## 3.6 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை மீதான நிலை பின்வருமாறு.

| ஊழியர் வகை | அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 09 | 06 | 03 |
| மூன்றாம் நிலை | 25 | 19 | 06 |
| இரண்டாம் நிலை | 52 | 36 | 16 |
| ஆரம்ப நிலை | 107 | 102 | 05 |
| | 193 | 163 | 30 |

(ஆ) நிறுவனத்தில் 06 முகாமைத்துவ உதவியாளர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக செய்திப் பத்திரிகைகளில் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 02 வருடங்கள் கடந்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அந்த பதவிகளுக்குரிய வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருக்கவில்லை.

(இ) முகாமைத்தவ உதவியாளர் (எழுதுவினைஞர்/ கணக்கு), ஏடுகளைப் பேணுபவர், கணக்கு உத்தியோகத்தர் போன்ற பதவிகளில் வெற்றிடம் ஏற்பட்ட காரணத்தினால் கணக்குப் பிரிவில் காசுக் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் கணக்கீட்டுச் செயற்பாடுகளில் முறையான வேலைக் கையளித்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கணக்குப் பிரிவில் பதவியணியினர் வெற்றிடம் காணப்பட்டமையின் காரணமாக 2012 ஆம் ஆண்டின் ஏடுகளைப் பேணுதல் மற்றும் இறுதிக் கணக்குகளைத் தயாரித்தலுக்காக ரூபா 250,000 உடன்படிக்கை செய்யப்பட்ட தொகைக்கு புறக் கணக்காய்வு நிறுவனத்திற்கு கையளிக்க வேண்டியிருந்தது.

## 3.7 வாகனப் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிறுவகத்திற்குரிய வாகனங்களின் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் நிறுவகத்தின் இயந்திர தொழில்நுட்ப பிரிவினைப் போன்றே நிறுவனத்திற்கு வெளியேயுள்ள வேறொரு நிறுவனத்தினாலும் நிறைவேற்றப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டில் இயந்திர பொறியியல் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்ட 96 வாகனப் பழுதபார்த்தல்களுக்குரிய செலவின மதிப்பீடு மற்றும் செய்யப்பட்ட கிரயங்களை இனங்காண்பதற்கான கிரய கணக்கீட்டு நடைமுறையொன்று காணப்படவில்லை.

(ஆ) ஒவ்வொரு வாகனங்கள் தொடர்பாகவும் வெளியார் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட சில பழுதபார்த்தல்களுக்குரிய பெறுமதி அந்தந்த வாகனங்களின் கோவைகளில் காணப்படவில்லை.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் நிறுவகத் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) செஸ் வருமானம்
(இ) நிலையான சொத்துக்கள்
(ஈ) களஞ்சியப்படுத்தல்